**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – 2021 – 2022ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை - மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – பள்ளிகளில் உயர் கல்வி, தொழில் மற்றும் வேலைவாய்ப்பிற்கு வழிகாட்டும் ஆலோசனை மையம் அமைத்தல் – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் [பக5(1)] துறை**

**அரசாணை (நிலை) எண். 5** | **நாள் : 21.01.2022**

**(திருவள்ளுவராண்டு 2053,**
**பிலவ வருடம் தை 8 )**

**படிக்கப்பட்டது :**

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் ந.க.எண்.2818/ஈ1 / 2021, நாள். 09.11 .2021 மற்றும் 20.12.2021.

**ஆணை:-**

2021 – 2022ஆம் ஆண்டுக்கான பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது : -

**அறிவிப்பு எண்.6: உயர் கல்வி, தொழில் மற்றும் வேலைவாய்ப்பிற்கு வழிகாட்டும் ஆலோசனை மையம்.**

"அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் அளிப்பதற்கு ஏதுவாக ஒவ்வொரு பள்ளியிலும் வழிகாட்டும் ஆலோசனை மையம் உருவாக்கப்படும். இதற்கென தனியே கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு, 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முறையாக கொண்டு சேர்ப்பதற்கு ஏதுவாக தொடர் வகுப்புகள் நடத்தப்படும்.

முன்னாள் மாணவர்களை கொண்டு அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு தொடர் நெறிப்படுத்தும் (Continuous Mentoring) முறையும் அறிமுகப்படுத்தப்படும்"

2. மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்கள் தமிழ்நாடு பாடத்திட்டத்தின் கீழ் கல்வி பெறும் மாணவர்கள் 10ஆம் வகுப்பு முடித்தவுடன், மேல்நிலை வகுப்பு அல்லது தொழிற்பயிற்சி நிறுவனம் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரி போன்ற நிறுவனங்கள் நடத்தும் தொழிற்கல்வி ஆகியவற்றை தெரிவு செய்து உயர்கல்வி பயில்கின்றனர் என்றும், இவர்களுக்கான உயர் கல்வி சார்ந்த வழிகாட்டுதல்களை ஆசிரியர்கள், பெற்றோர்கள் போன்றோர் மேற்கொள்கின்றனர் என்றும், 10ஆம் வகுப்பு நிறைவு செய்யும் மாணவர்களுக்கு மேல்நிலை வகுப்பில் எந்தப் பிரிவினை தெரிவு செய்யலாம் என்பது குறித்து தெளிவான புரிதல் இல்லாமல் இருக்கும் நிலை உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், 11 மற்றும் 12ஆம் வகுப்பு பாடப்புத்தகங்களில் உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்பு சார்ந்த தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்றும் இருப்பினும் தகவல் தொழில்நுட்ப வாய்ப்புகள் குறைவாக உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் 9 முதல் 12ஆம் வகுப்பு கிராமப்புற மாணவர்களுக்கு, உயர்கல்வி, தொழில் மற்றும் வேலைவாய்ப்பு பற்றிய புரிதல் குறித்து பெரிய இடைவெளி உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

3. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர், மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையால், தமிழகத்தில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் மூலமாக 6,177 அரசு/ உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு தொழில் மேற்படிப்புகள் மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த விவரங்களை வழங்க ரூ.3,08,85,000/-க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். மேலும், இத்திட்டத்திற்கு மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநருக்கு கீழ்க்காணும்

செலவினங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார் :-

| Sl. No. | Particulars | Total Cost (in Rs) |
|---|---|---|
| 1 | Student Module Creation Through Workshops (Curriculum, Syllabus and Module) & Development and Career Guidance Portal for Students. | 6,50,600/- |
| 2 | Blended Training for Teachers from Higher Secondary Schools (3119) & Online Certificate Courses | 38,25,000/- |
| 3 | Student Module and Teachers Handbook - Printing Expense (Class 11th and 12th Students) | 2,40,29,400/- |
| 4 | Identifying and Orienting Talented Students - Career Mela in 413 Blocks & Career Guidance Pamphlets for Students (Class 11 & 12) | 23,80,000/- |
| | Total (Estimated Expenses) | 3,08,85,000/- |

மேற்கண்ட செலவினத் தொகை, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்ட நிதியிலிருந்து வழங்கப்படும் எனவும் இத்தொகையில், ரூ.6,50,600/- மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது எனவும், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. அரசுப் பள்ளிகளில், 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்குவதற்கு ஆலோசனை மையம் உருவாக்குவதற்கும், முன்னாள் மாணவர்களைக் கொண்டு அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு தொடர் நெறிப்படுத்தும் (Continuous Mentoring) முறை அறிமுகப்படுத்துவதற்கும் மற்றும் இத்திட்டத்திற்கென ஆகும் செலவினத் தொகை ரூ.3,08,85,000/- (மூன்று கோடியே எட்டு இலட்சத்து எண்பதைந்தாயிரம் மட்டும்)யினை மேலே பத்தி 3-ல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்ட நிதிலிருந்து மேற்கொள்வதற்கும் ஆணை வழங்குமாறு மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் அரசினை கோரியுள்ளார்.

5. மேற்காண் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, அரசுப் பள்ளிகளில் 9 முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்குவதற்கு ஆலோசனை மையம் அமைக்க அனுமதி அளித்தும் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு முன்னாள் மாணவர்களை கொண்டு தொடர் நெறிப்படுத்தும் (Continuous Mentoring) முறையினை ஏற்படுத்த அனுமதி அளித்தும், இத்திட்டத்திற்கென ஆகும் செலவினத் தொகை ரூ.3,08,85,000/- (மூன்று கோடியே எட்டு இலட்சத்து எண்பத்தைந்தாயிரம் மட்டும்)யினை மேலே பத்தி 3-ல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர்,
மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை-6.
மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி , சென்னை-6.
பள்ளிக் கல்வி ஆணையர், சென்னை-6.

**நகல்:**
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை-9.
நிதித் (கல்வி II) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
பள்ளிக் கல்வி (வ.செ.)த் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/01/22

பிரிவு அலுவலர்.

24/01/2022